Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-6 பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

குடி அரசு

Estd - 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5 0-0 [illegible]

மாலை 19 } ஈரோடு 28 9-1946 புரட்டாசி 12உ { மலர் 51

நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A., B.L.)

(14 9-46 குடி அரசின் தொடர்ச்சி)

புருஷன் தொடுக்கவும், பெண் வாங்கவும் ஏற்பட்ட வித்தியாசமே, ஆணுக்குப் பெண் தாழ்ந்தவள் என்ற நிலைமையை உண்டாக்கியது. காலாகாலமாகப் பெண்கள் ஆணுக்குக் கீழ்ப்பட்டு இருப்பதற்குக்காரணம், இந்தப் பொருளாதாரவித்தியாசத்தால் நேர்ந்துள்ளதென அறியவேண்டும். இந்தப் பொருளாதார வித்தியாசம், உலகிலோ, சமூகத்திலோ, இருக்கும்வரை ஆணுக்குப் பெண் தாள்பணிந்தே நடக்கவேண்டிவரும். இந்தப் பொருளாதார வித்தியாசத்தை நீக்காமல், ஆணும் பெண்ணும் சரிசமத்துவம் பெறவேண்டுமென்பது வெறும் சொல்லேயாகும். இந்தக் கோரிக்கைப் பிறவிக் குருடன் சூரிய தரிசனம் செய்ய கோரும் கதையை ஒக்கும்.

சமதர்ம சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அமைக்கப்படும் வேலையில் வித்தியாசமிராது. ஆணும் பெண்ணும் சரிசமத்துவமாகவே எந்த வேலையும் செய்ய துணிவு பெறுவார்கள். வேலைக்குரிய ஈடும் இருவரும் சரிசமானமாகவே பெறுவார்கள். வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களுக்கெல்லாம் இருவரும் சரிசமத்துவமாய்ப் பாத்திரமுள்ளவர்களாவார்கள். ஒருவனுக்கு மற்றொருவன் தாழ்ந்து வாழ வேண்டுமென்பது சமதர்ம சமூகத்தில் கிடையாது. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பொருளாதார வித்தியாசம் தொலைந்த அன்று முதல்தான் பெண்கள் தங்கள் பிறப்புரிமைகளாகிய எல்லாச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெறுவார்கள். அந்தப் பொருளாதார வித்தியாசம் ஒழியும் வரை, பெண்களின் அடிமைத்தனம் நீங்கவே நீங்காது. மற்ற முயற்சிகள் யாவும் காலப்போக்கே: ஆதலின், சமதர்ம சமூகம் ஒன்றில்தான் பெண்கள் ஆணுடன் சரிசமத்துவம் பெற முடியுமென அறிக.

—சமதர்ம சமூகம் ஒன்றில் தான், பிள்ளைகளைப் பெறும் பேற்றினைப் பாக்கியமெனச் சொல்லக்கூடும். மற்ற சமூகங்களில்பிள்ளைகளைப் பெறுதல் (கோடானுகோடி மக்களுக்கு) சுமை (Burden) என்று கூறல் வேண்டும். Children are burden to the Poor. அதாவது "செல்வம் இல்லாதவர்களுக்கு பிள்ளைகள் பெரும் பாரம்" என்றார் பெரியோர். இல்லாதார் வீட்டில் கர்ப்பம் தரிப்பது துக்கம். கர்ப்பம் தரித்துக் கர்ப்பத்தில் வளர்வதும் துக்கம். பெற்ற பிறகும் பிள்ளைகளை வளர்ப்பதும் துக்கம். வளர்ந்த பிறகு; கல்வி கேள்விகள் கொடுக்க முடியாததும் துக்கம். இத்யாதி துக்கங்களுக்கு இக்காலத் தாய்மார்கள் இரையாகின்றார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், பிள்ளைகளைப்பெற்று வளர்க்கும் பொறுப்பு, தாய்மார்களுடையதே என்று உலகம் எண்ணி வருவதுதான். பிள்ளைகளைப்பெற்று வளர்த்தல் சமூகப் பொறுப்பென்ற (Social Responsibilty) எனப்பான்மையை ஆதரிக்கும் சமதர்ம சமூகமொன்றில்தான், பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் தாய் செய்த பாக்கியமெனலாம். இக்காலத்தில் பிள்ளைகளைப் பெறவும், வளர்க்கவும் செல்வம் பெற்றவர்கள் மிகவும் சிலரே. எல்லாச் செல்வமும் படைத்த இல்லாளே பாக்கியம் படைத்த தாயாவாள். ஆனால், பொருளாதாரச் சமத்துவம்

பெற்ற சமதர்ம சமூகத்தில் எல்லாப் பெண்களும், பிள்ளைகளைப் பெறுவது பாக்கியமென்றே கருதுவார்கள்.

இரஷிய உலகில், கர்ப்பவதிக்கு, பிள்ளை பெறுவதற்கு முந்தியும் பிந்தியும் 6-வாரமுதல் 8-வாரம் வரை சம்பளத்துடன் விடுமுறை கொடுக்கின்றார்கள். விஞ்ஞான மருத்துவம் (Scientific Midwifery) இலவசமாகச் செய்கின்றார்கள். குழந்தைகள் வளரும் கழகங்கள் (nurseries, creche) நாடு முழுதும் நிறைந்துள. ஒவ்வொரு தொழிற்புரியும் தொழிற்சாலையின் அருகேயும் இந்தக் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி, உயர்தரக்கல்வி, தொழிற்கல்வி, தேசியக்கல்வி ஆகிய யாவும் இலவசமே. இந்தச் சமதர்ம சமூகத்தில் ஒன்றில்தான், குழந்தைகள் அழுவதில்லையாம்! அரசாளும் ஸ்டாலினுடைய (Stalin) பிள்ளையாயிருந்தாலும், கைத்தொழில் புரியும் மிலிகாப் (Milikoff) பினுடைய பிள்ளையாயிருந்தாலும் யாவருக்கும் மருத்துவ சிகிச்சை ஒன்றே; வைத்திய முறையும் ஒன்றே; உணவும் ஆடையும் வீடும் ஒன்றே. இந்தக் காரணங்களாலன்றோ (Russia is the paradise for children) இரஷிய நாடு, குழந்தைகளுக்குக் குபேரநாடு என்று வழங்கப்படுகின்றது. எனவே இந்த நாடு ஒன்றுதான் சமதர்ம நாடென அறிக.

இந்தப் பாக்கியத்தை மற்ற உலகம் பெறவே, நாம் உழைக்க வேண்டும். செல்வங்களனைத்தையும் பணக்காரர்கள் அபகரித்துக்கொண்டு, தங்களுடைய பிள்ளைகள் மாத்திரம், கல்வி, கேள்வி பெறுவதற்குக் கல்லூரிகளை அமைத்துக் கொள்வதும், ஏழை

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

ஈரோடு, வைத்தியவள்ளல்
ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் மகனார்
திருவளர்நம்பி. சம்பத் அவர்கட்கும்
திருப்பத்தூர், G சாமிநாயுடு B.A., B.L., அவர்கள் மகளார்
திருவளர்நங்கை. சுலோச்சனா அம்மைக்கும்
நிகழ்ந்த திருமண நன்னாளில் மணமக்கட்களித்த

வாழ்த்துப்பா.

☆

கொங்கார்ந் தோளிரும் கொங்குநா டதனிடை

மங்காப் புகழொளி பொங்கு மீரோட்டில்
வாழ்வோன் எங்கள் வளமார் தமிழர்
வாழ்வுபெற் றுயர வாழ்நா ளெல்லாம்
உடல்பொரு ளளித்துமற் றொன்று மளிக்கக்
கடம்பூண் டுயர்பணி கவினுற வாற்றும்
பெரியார் தமக்கும் பெரியோ னாகிய
வைத்திய வள்ளல் மாபெருந் தலைவன்
கிருட்டின சாமியின் இளர்தவத் துதித்தோன்
அடக்கமும் அன்பும் நடக்கையும் படைத்தோன்
பெரியார்க் குப்பின் பெரும்பணி புரிய
உரியேன் யானென உரிமைபூண் டொளிர்வோன்
அத்தகு பயிற்சியில் அவருடன் பழகி
நாடெலாஞ் சென்று நலம்பல விளைப்போன்
நாவலன் நல்ல நற்குண நம்பி
சம்பத் என்னும் சால்புடை யோனும்
திருப்பத் தூரில் சென்றநா ளெல்லாம்
நீதிக் கட்சியின் நிலைத்தநற் றூணாய்க்
கோதின் றமைந்து குலவிடும் நலம்பல
விளைத்தோன் மற்றும் வீறுற மகனை
அப்பணிக் குழைக்க அளித்தோ னாகிய
சாமிநா யுடுவின் தகவுறு தவத்தாற்
தோன்றிய செல்வி ஊன்றிய அறிவினள்
கற்புக் கடம்பூண் பொற்புடை யாட்டி
சீர்திருத் தஇளஞ் சிங்க மாகிய
சம்பத் அவனைச் சால்புற மணக்க
உளங்கொண் டிலங்கும் உயர்குண நங்கை
சுலோச்சனா வென்னுந் தூய்மையார் செல்வியும்
இன்னிய முழங்க ஏத்தொலி முழங்க
வாழ்த்தொலி முழங்க வகுப்பு வாரிப்
பிரதிநிதித் துவம் பிறங்கிட நன்றே
முன்னா ளமைச்சவை முன்னி யுளங்கொள
அமைத்தே சட்ட அவையினர் ஒப்ப,
சட்டங் கொணர்ந்து தமிழர்கள் போற்ற
நிலைபெறு வித்த நீள்புக ழாளன்
முத்தையாவின் முதன்மையார் தலைமையில்
மணந்தன ரம்ம! மணமா ரிவரே
திராவிட நாட்டைத் திராவிடர்க் காக்குந்

திருமணம்

30-9-46 திங்களன்று காலை 9-மணிக்குக் கும்பகோணம் தோழர் பி முத்து தனபால் அவர்கள் பி ஏ., பி. எல்., (அட்வகேட் தகையையில் தோழர் வா. தா. ஆங்கரை தோழர் ரெ. ராதாகிருஷ்ணன் அவர்கள் மகள் தோழியர் நீலவேணி அம்மைக்கும், வா. தா. ஏதுமலை தோழர் கோ. நவனீதம் அவர்கள் மகன் தோழர் வெங்கட்டராமன் அவர்களுக்கும் ஏதுமலை கிராமம் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும்.

தி. பொ. வேதாசலம், கே கே. நீலமேகம், வி. சின்னதம்பி, எஸ். ஆர். சுப்பண்ணா ஆகிய தோழர்கள் திருமணத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

நீத்தார் நினைவுநாள்

15-9-46ல் பழயகோட்டை அரண்மனையில் காலம்சென்ற இராவ் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மூடப் பழக்க வழக்கங்களை யொழித்து சீர்திருத்த முறையில் இப்போதிருக்கும் பட்டக்காரரும் அவர் இளவலும் நீத்தார் நினைவுநாளைக் கொண்டாடியது மிகவும் குறிப்பிடத்தக்கது.

பாட்டாளி மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சிறந்த உணவு அளிக்கப்பட்டது.

அறிவுக்கு விருந்து

பெரியார் பெருந்தொண்டு

"பெரியார் பெருந்தொண்டு" என்ற நூல் தோழர் எஸ் சிவப்பிரகாசம் அவர்களால் ஆக்கப்பட்டது. பெரியார் ஆற்றிய அருந்தொண்டுகளை அழகான பாக்கள் வாயிலாகத் தோழர் சிவப்பிரகாசம் விளக்கிக் காட்டியுள்ளார். கிரௌன் 1/8 அளவில் கிளேஸ் தாளில் நூல் ஆக்கப்பட்டுள்ளது. 52 பக்கங்கள் கொண்டது பெரியார் பிறந்த வாரக் கொண்டாட்டத்தின் நினைவாக 8 அணா விலையிட்டிருந்த இந்நூலை 6 அணாவிற்கு விற்க முடிவு செய்துள்ளோம் நூல் விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ரூ. 0-6-9. ஸ்டாம்பு அனுப்பவும். மானேஜர் குடியரசு பதிப்பகம், ஈரோடு.

உண்மைத் தொழிலாளி யார்?

உண்மையானத் தொழிலாளர்களின் நிலைமையைப்பற்றியும் திராவிடர் கழகத்தினர் தொழிலாளர்களைப்பற்றிக் கொண்டுள்ள கொள்கையைப் பற்றியும், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை "உண்மைத் தொழிலாளி யார்? தொழிலாளியின் இலட்சியம் என்ன?" என்ற தலைப்பிட்டு சிறு நூலாக வெளியிட்டுள்ளோம். அதன் விலை இரண்டணா தான். நூலை விரும்புவோர் 0-2-9 ஸ்டாம்பு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும். மானேஜர், குடியரசு, அச்சகம் ஈரோடு.

திருத்தொண்டாற்றிச் சிறப்பெலாம் பெற்றுத்
தமிழனை யாவரன் தருதியார் புதல்வரைப்
பெற்றுப் பெரியார் பெயரரை ஏற்றி
வழிவழித் தொண்டர் வந்தனர் அன்ன
மகிழ்கொள அவர்பெயர் வழங்கிட இட்டே
எல்லாச் செல்வமும் இனிதுறப் பெற்று
வாழிய ஊழி வாழிய ரென்றே
வாழ்த்துதும் நன்றே வாழ்த்துதும் நன்றே
வாழிவா ழியரென வாழ்த்துதும் நன்றே

இங்ஙனம்,

கோ. சி. பெரியசாமிப் புலவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர்,
தமிழ்பொழில் ஆசிரியர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

திருப்பத்தூர்
15—9—'46.

திராவிடர்கழகநிதி

கோவை மாவட்டத் தோழர்கட்கு

நமது மாவட்டத்தில நிதி டிக்கெட்டுகள் முறையே கோயமுத்தூர், புளியகுளம், சூலூர், இருகூர், பொள்ளாச்சி, ஆனைமலை, உடுமலைப்பேட்டை, கணியூர், தாராபுரம், திருப்பூர், ஈரோடு, பவானி ஆகிய இடங்களில் ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறன. நமது தோழர்கள் தயவு செய்து இம்மாதம் 30ந் தேதிக்குள் நிதி வசூலை முடித்துக் கொடுக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக மாணவத் தோழர்கள் வசூல் செய்வதில் கலந்து ஒத்துழைத்து விரைவில் நமது மாவட்டத்தின் வசூலை முடித்துக்கொடுக்க வேண்டுகிறேன்.

என். அர்ச்சுனன்,
தலைவர், திராவிடர் கழகம்,
கோவை மாவட்டம்.

கருப்புச் சட்டைப் படை

நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

தமிழ் நாட்டில ஆங்காங்கு இதுவரை அமைக்கப்பட்டுள்ள கருப்புச் சட்டைப்படையினரின் எண்ணிக்கை உடனே, தேவைப்படுகிறது. ஆகவே, கருப்புச் சட்டைப்படை நிர்வாகஸ்தர்களோ அல்லது திராவிடர் கழக நிர்வாகஸ்தர்களோ தயவுசெய்து தங்கள் தங்கள் ஊரில் கருப்புச் சட்டைப் படையில் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை, பெயர் விலாசம் முதலிய விவரங்களை உடனே கீழுள்ள முகவரிக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

க. ச. படை அமைப்பாளர்
P. B. No. 325,
சென்னை 2.

அறிவிப்பு

24-9-46 முதல் தோழர் இ. ஆ. சின்னுசாமி செட்டியார் கட்டிடத்தில் நமது இயக்க பத்திரிகைகளும், குடி அரசு பதிப்பக வெளியீடுகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

எஸ். துரைசாமி,
ஏஜண்டு, இராசிபுரம்.

குடி அரசு

1943-ஆ செப்டம்பர்௴ 28௳

எல்லோர்க்கும் கல்வி?

திராவிடநாட்டிலுள்ள கோயில்களில் கோடிக்கணக்கான பொருள்கள் குவிந்து கிடக்கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அப்பொருள்கள் யாவும் மக்களின் நலனுக்காக எவ்வகையிலும் பயன்படாமலிருக்கின்றன வென்பதும், அவை குறிப்பிட்ட ஒரு இனத்தார் சீரும் சிறப்பும் பெற்று இன்பமுடன் வாழ்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன வென்பதும் யாவரும் உணர்ந்ததே.

இக்கோயில்கள் நம் நாட்டின் பல பகுதிகளிலும் ஏன் கட்டப்பட்டன என்பதை நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தில் கோயில் கட்டப்படுவதற்குரிய காரணங்களைக் காணலாம். உழைக்கின்ற இனம் என்றென்றும் அரசனுக்கும் உயர்ந்த சாதிக்காரர்கள் என்று கருதப்படுகின்றவர்களுக்கும் அடிமையாயிருக்க வேண்டுமென்று திட்டங்கள் பல வகுத்தனர். அத்திட்டங்களில் கோயில் கட்டுவதுமொன்றாகும். என்றென்றும் உழைக்கும் மக்கள் தங்கள் உழைப்புக்குத்தக்க ஊதியம் பெறவில்லையே என்று உணரும் காலம் ஒன்று வரும். அப்போழ்து அவர்கள் தாங்கள் இழி நிலையிலிருப்பதற்குக் காரணம் தங்களை ஆளும் அரசர்கள் என்பதை அறிந்துகொண்டு அரசனுக் கெதிராகக் கிளர்ச்சி செய்து தங்கள் உரிமையைப்பெற முயலுவர். அங்ஙனம் கிளர்ச்சி செய்கின்ற நேரத்தில் அரசனின் அருகில் வீற்றிருக்கும் மதகுருக்கள் உழைக்கும் கூட்டத்தாரிடைக் காட்சியளித்து 'மக்களே! எல்லாம் ஆண்டவன் செயல்; ஊழ்வினைப்பயன்; நம்மூரின் கோயில்கொண்டுள்ள எம்பெருமானை வேண்டிக்கொள்ளுங்கள். உங்கள் குறைகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் ஒழிந்துவிடும்'' என்று கூறுவர். அறியாமை என்னும் அகழியில் ஆழ்ந்து உழன்றிடும் பாட்டாளி மக்கள் அய்யன் கூறியவற்றை அப்படியே நம்பி ஆண்டவன் கோயில்களுக்குச் சென்று ஆண்டவனுக்கு அர்ச்சனை, நைவேத்தியம் முதலியன செய்து தங்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக்கொள்வர்.

எனவே பாமர மக்களை அரசன் அடக்கி ஆள்வதற்கும், ஆண்டவன் பெயரால் அவர்களிடத்திலுள்ள பொருள்களைக் கொள்ளையடிப்பதற்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன என்று கூறலாம்.

இப்படிப்பட்ட கோயில்களில் மக்கள் நாள்தோறும், திங்கள்தோறும், ஆண்டுதோறும் பொருள்களைக்கொண்டுபோய்க் குவித்தவண்ணமிருக்கின்றனர். திருப்பதி வெங்கடாசலபதிக்கு மாத்திரம் ஆண்டு ஒன்றுக்கு 22 இலட்ச ரூபாய்கள் வருவாய் வருவதாக 1930 ஆண்டில் இந்து பத்திரிகை வெளிப்படுத்தியிருந்தது. 1930ம் ஆண்டு கணக்குப்படி திருப்பதிக்கோயிலுக்கு ஆண்டொன்றுக்கு 22 இலட்ச ரூபாய் வருவாயென்றால் இந்தக் காலத்தில் கள்ள மார்க்கட்டின் தேசியத்தின் பெயரையும், கடவுளின் பெயரையும் சொல்லி கொள்ளை இலாபமடித்துக் கோடீஸ்வரர்களான மக்களால் திருப்பதிக் கோயிலுக்கு எவ்வளவு வருவாய் வந்திருக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ? சென்ற ஆண்டு திருப்பதி வெங்கடாசலபதிக்கு 10 இலட்சரூபாயில் ஓர் வைரமுடிசெய்து அணிவித்தாராம் ஓர் செல்வந்தர். அச்செல்வந்தர் எக்காரணங் கருதி 10 இலட்ச ரூபாயில் கிரீடம் செய்து வெங்கடாசலபதிக்கு அணிவித்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

திருப்பதி கோயில் ஒன்றைப் பற்றிக் கூறினோம். திராவிட நாட்டிலுள்ள மற்ற கோயில்களிலும் கணக்கெடுத்துப் பார்த்தால் ஆண்டொன்றுக்குக் கோயிலின் பெயரால் எத்தனை கோடி ரூபாய்கள் பாழ்படுத்தப்படுகின்றன என்பது நன்கு தெரியும்.

பாட்டாளி மக்களின் உழைப்பால் கோயில்கள் கட்டப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே. அக்கோயில்களில் குவியும் பொருள்களும் பாட்டாளி மக்களுடையவை என்பதை யாவரும் உணர்தல் வேண்டும்.

கள்ளமார்க்கட்டில் கொள்ளையடிக்கும் கள்ளர்கள் தங்கள் கள்ளத்தன்மையை மறைத்து நல்லபிள்ளைகளாகப் பொதுமக்களிடையில் உலவுவதற்குக் கோயில்களுக்குச் செலவழிக்கின்றனரே யொழிய கோயில்களில் எழுந்தருளியிருக்கும் அப்பன்மேலோ அல்லது அம்மை மேலோ உண்டான பக்தியால் இலட்சக்கணக்கில் செலவழிக்கவில்லை. செட்டியார் செல்லியம்மனுக்குக் கும்பாபிஷேகம் திங்கள் தோறும் தவறாமல் செய்கின்றாரென்றால் தான் பாமர மக்களைப் பலவகையிலும் ஏய்த்துப் பிழைப்பதால் தனக்குக் கேடு ஏற்படுமோவென அஞ்சி அக்கேடு வராமல் தடுப்பதற்காகவே செல்லியம்மன்பால் பக்தி

யைச் செலுத்துகின்றார் எனலாம். இதே மாதிரிப் பார்க்குங்கால் கோயில்களுக்குச் செலவு செய்ய முன்வரும் ஒவ்வொருவனும் தன் அயோக்கியத்தனத்தை மறைப்பதற்கோ அல்லது தன் அறியாமையாலோ கோயில்களுக்குச் செலவழிக்கின்றான் என்பது நன்கு தெரியவரும். அப்படியில்லாவிட்டால் கால் ஆழாக்குப் பாலுக்கும் வழியின்றி ஆயிரக்கணக்கான குழந்தைகள் உயிர் துறக்கும் இக்காலத்தில் தண்ணீர் சிறிதும் கலவாத, ஆயிரம் சேர் பசும்பாலைத் தில்லையிலுள்ள நடராசரின் தலையில் தருமபுரப்பண்டார சந்நிதிகள் ஊற்றும்படிச் செய்திருப்பாரா? அவருக்குத் தெரியும் அவரும் அவரின் சிஷ்ய கோடிகளும் செய்துவரும் அக்கிரமச் செயல்கள். அவற்றை மறைப்பதற்கு ஆண்டவன் என்று கருதப்படும் சிலையின் தலையில் பாலை ஊற்றுகின்றார் என்பதைத் தவிர வேறு என்னவாயிருக்குமென்று கேட்கின்றோம்.

கோயில்களில் குவிந்து கிடக்கும் பொருள்களையும் ஆண்டுதோறும் வருவாயாக வரும் பொருள்களையும் பொதுமக்களின் நன்மைக்காக ஏன் பயன்படுத்தக்கூடாது என்று கேட்கின்றோம். கோயில்களிலுள்ள பொருள்களைக் கல்விக்காகப் பயன்படுத்தினால் கடவுள் கடுஞ்சினங் கொள்வாரோ? கோயில்களிலுள்ள பொருள்களைக் கல்விக்காகப் பயன்படுத்த வேண்டுமென்றால் பார்ப்பனர்கள் கூக்குரலிடுகின்றனரே! இவர்களின் அப்பன் வீட்டுச் சொத்தா கொள்ளை போகின்றது, என்று கேட்கிறோம்? பாட்டாளி மக்களின் உழைப்பால் உண்டாகிய பொருள்கள்தான் கோயில்களில் குவிந்து கிடக்கின்றன என்பது எப்படிப்பட்டவராலும் மறுக்கமுடியாத உண்மை. ஆனால் அப்பாட்டாளி மக்களின் நன்மைக்காகப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டுமென்றால் அப்பொருள்களின் தோற்றத்திற்கு எவ்வகையிலும் காரணமாயிராத பார்ப்பனர்கள் ஏன் நீலிக்கண்ணீர் வடிக்கவேண்டுமென்று கேட்கின்றோம்.

இப்போழ்து ஆட்சியிலிருக்கும் மந்திரிசபையார், 'மக்களின் நன்மைக்காகவே ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருக்கின்றோம்' என்று கூறும் மந்திரிசபையார், கோயில்களில் குவிந்துகிடக்கும் கோடிக்கணக்கான பொருள்களில் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்துவார்களா என்று கேட்கின்றோம். அப்பொருள்களைக் கல்விக்காகப் பயன்படுத்தினால் நம் நாட்டில் நூற்றுக்கு நூறு பேரும் அறிவுக்கண் பெற்றவர்களாவார்கள்.

உயிர்துறக்கும்தருவாய் வரையில் சைவத்திற்காகவே பாடுபட்டுக்கொண்டிருந்த காலஞ்சென்ற பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை M. A., M. L., அவர்கள் இறப்பதற்கு ஓராண்டிற்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள மக்கள் யாவரும் கல்விகற்று இன்பமுடன் வாழ வேண்டுமானால் தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் குவிந்து கிடக்கும் கோடிக்கணக்கான பொருள்களைக் கல்விக்காகச் செலவழித்தால்தான் முடியுமென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த ஓர் கூட்டத்தில் பேசினார். மேலும் அவர் ஒரு கோயிலின் தாமகர்த்தாவாகக்கூட இருந்தவர். அப்படிப்பட்டவர் ஏன் அவ்வண்ணம் சொல்லவேண்டும்? கோயில்களில் பொருளைக் குவிப்பதால் மக்களுக்கு நன்மையொன்றுமில்லை என்ற உண்மையை உணர்ந்த காரணத்தினாலும், திராவிடநாட்டின் செல்வங்களில் ஒரு பகுதி கோயில்களில் பாழ்பட்டுக் கிடக்கின்றன என்ற உண்மையை உணர்ந்த காரணத்தினாலுமே கா. சு. பிள்ளை தன் அந்தியகாலத்திலே மேற்குறிப்பிட்டவாறு கூறினார் எனலாம். அதே மாதிரியாக பெரியார் இராமசாமி அவர்கள் நம்நாடு சீர்பெற்று, நாட்டிலுள்ள மக்களனைவரும் கல்விபெற்று விளங்கவேண்டுமானால் கோயில்களிலிருக்கும் பொருள்கள் கல்விக்காகவும் தொழிற்சாலைகள் கட்டுவதற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டுமென்று சுமார் 25-ஆண்டுகளாகக் கூறி வருகின்றார்.

எனவே மந்திரிசபையார் சற்று சிந்தித்து கோயிற் சொத்தைப் பொதுநலத்திற்குப் பயன்படுத்த முனைவார்களாக. அங்ஙனம் முனைவார்களாயின் 100க்கு 100பேரும் நாட்டில் கல்விகற்றவர்களாவார்கள். அக்கோயில்களில் கிடைக்கும் பொருள் யாவரும் கல்விகற்பதற்குப் போதவில்லையாயின் 100ரூபாய்க்குப் 10 ரூபாயாகக் கூட விற்பனைவரிபோட்டு அதனால் வரும் வருவாயைக் கொண்டு சரிபடுத்திக்கொள்ளலாம். அப்படி 100க்கு 10-ரூபாய் விற்பனைவரி போடுவதால் ஒருவருக்கும் பெருத்த நட்டம் வந்துவிடுமென்று கூறுவதற்கில்லை. அப்படி வந்தாலும் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். காரணம் அவ்விற்பனைவரியால் வரும் பணம் கல்வி வளர்ச்சிக்காக, அறிவுக்கண் திறக்கப்படுவதற்காகப் பயன் படுத்தப்படுவதுதான். எனவே மேற்கூறும் முயற்சியில் மந்திரிசபையார் இறங்குவார்களா என்று கேட்கின்றோம்.

மேலும் இந்தக் கோயில்களின் காரணமாக மக்கள் மடையர்களாகின்றனர்! "தீராத வல்வினைகள் தீர்த்து வைப்பான் கோவிந்தன்" என்று கூக்குரலிட்டு நடுப்பாதையில் நண்பகலில் புரண்டுகொண்டு செல்லும் மக்களைக் காண்கிறோம். நாக்கிலே ஓர் ஊசியைக் குத்திக்கொண்டு பட்டைப்பட்டையாக நாமத்தை நெற்றியில் போட்டுக்கொண்டு திருப்பதி வெங்கடாசலபதிக்கு வேண்டிக்கொண்டதாகச் சொல்லிக்கொண்டு தெருவில் செல்லும் மக்களையும் காண்கின்றோம். புரட்டாசித் திங்களில் திருப்பதி மலைக்குச் சென்று மொட்டையடித்துத் தங்களை விகாரப்படுத்திக்கொண்டு வரும் பெண்களையும் பார்க்கின்றோம். இம்மாதிரியாகக் கோயிலுக்கு வேண்டிக்கொள்வதின் பெயராலோ, அல்லது வேண்டிக்கொண்டதாக நடிப்பதின் பெயராலோ மக்கள் அருவருக்கத்தக்க முறையில் நடந்துகொள்கின்றார்கள். இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் மந்திரி சபையார் தடுப்பார்களா என்று கேட்கின்றோம்.

மேலும் ஆண்டுதோறும் அந்தந்த திங்கள் தோறும் நடைபெறும் திருவிழாக்கள் காரணமாக மக்கள் பலவகைத் தொல்லைகளுக்குட்படுத்தப்படுகின்றனர். திருவிழா கூட்டத்தில் பலவகை நோயாளிகளின் மேல் மக்கள் உராய்ந்துகொண்டு போகும் நிலைமை ஏற்படுவதால் அத்திருவிழாவிற்கு வந்த மக்களில் சிலர் தொத்து நோயால் வாடுகின்றனர். கூட்டத்தின் மிகுதியின் காரணமாகப் பல குழந்தைகள் காணாமற்போய் விடுவதும், சில குழந்தைகளும், வயது முதிர்ந்தவர்களும் உயிரிழக்க நேருவதும் திருவிழாவில் இயற்கையாயுள்ளன. விபசாரத்தை வளர்ப்பதற்குத் திருவிழா தக்க இடமாக உள்ளது. திருடர்கள் திருவிழாவில் பகற்கொள்ளையடித்துச் செல்வதைக் காணலாம்.

எனவே இப்படிப்பட்ட திருவிழாக்கள் நடைபெறாமலிருப்பதற்கு மந்திரி சபையார் தக்கதொரு சட்டம் வகுப்பார்களா என்று கேட்கிறோம்.

எல்லா மக்களும் கிருத்துவர்களைப் போலவும், முஸ்லீம்களைப்போலவும் ஒரு பைசா கூட செலவு செய்யாமல் பகுத்தறிவுக்கு ஒட்டிய முறையில் கடவுள் வழிபாடு செய்ய இப்போதுள்ள மந்திரி சபையார் சட்டத்தின் வாயிலாக ஏற்பாடு செய்திடின் மேற்கூறிய முறையில் கடவுளின் பெயரால் பொருள்கள் அழிவுறுவதும், மக்கள் மதியிழப்பதும் இரா என்பது உறுதி. இதைச்செய்ய இப்போதிருக்கும் மந்திரிசபையார் முன்வருவார்களானால் அவர்களின் புகழ் குன்றாப் புகழாகும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இச்சீர்திருத்தங்களைச் செய்யாமல் மந்திரி சபையார் விருந்து மோகத்திலேயே இருப்பார்களாயினும் மந்திரிசபை இருப்பதினும் இராமலிருப்பது மேம்பாடுடைத்து.

தெ. இ. ர. தொழிலாளர் வெற்றி! வெற்றி!!

தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் "பகிரங்கமான விசாரணை செய்தபின்னர்தான் ஒரு தொழிலாளி வேலையினின்றும் நீக்கப்பட வேண்டும்" என்ற உரிமையைப் பெறுவதற்காக வேலைநிறுத்தம் செய்தனர். தொடர்ந்து ஒரு மாதகாலம் வேலைநிறுத்தம் செய்து இறுதியாக வெற்றியும் பெற்றனர்.

"தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட்களின் தூண்டுதலினால்தான் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்" என்று காங்கிரஸ்காரர்களும், தேசிய ஏடுகளும் பிரச்சாரம் செய்துவந்த செய்தி யாவரும் உணர்ந்ததே. வேலை நிறுத்தம் கம்யூனிஸ்ட்களின் தூண்டுதலினால் ஏற்பட்டதென்று கூறுவதைவிட வேலை நிறுத்தக் கோரிக்கை நியாயமானதென்பதற்காகக் கம்யூனிஸ்ட்கள் அதற்கு ஆதரவு காட்டினார்கள் என்று கூறுவதுதான் பொருத்தமுடையதாகும். அதன் காரணமாகவேதான் திராவிடர் கழகத்தினரும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு காட்டினர்.

அப்படியே கம்யூனிஸ்ட்களின் தூண்டுதலினால்தான் வேலை நிறுத்தம் ஏற்பட்டதாக வைத்துக்கொண்டாலும் "மக்களின், சிறப்பாகத் தொழிலாளர்களின் நன்மைக்காகவே ஆட்சி மன்றத்தில் வீற்றிருக்கின்றோம்" என்று கூறும் காங்கிரஸ் மந்திரி சபையார் என்ன செய்திருக்க வேண்டும்? தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானதா என்பதை ஆராய்ந்து நியாயமானதாயிருப்பின் அவர்களின் கோரிக்கையை அவர்கள் அடைய வழிதேடுவதுதானே மந்திரி சபையாரின் கடமையாயிருக்கவேண்டும்? அதைவிடுத்து அவர்கள் தெ. இ. இரயில்வே பொதுமானேஜர் ரெய்னால்ட்ஸ் துரையுடன் சேர்ந்துகொண்டு தொழிலாளர்களைத் துன்பத்திற்குட்படுத்தியது நியாயமாவென்று கேட்கின்றோம்.

மனிதத்தன்மையை முற்றிலும் மறந்த சபையார் போலீசைக்கொண்டு வேலை நிறுத்தத்தைப் பலாத்காரமாகக் கலைக்க முயன்றனர். 5பேர்

கள் மலபார் போலீசாரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். சுமார் 150 பேர்கள் தடியால் தாக்கப்பட்டு படுகாயமுற்றனர். 100க் கணக்கான ஆடவர்களும் மகளிர்களும் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்!

இவ்வளவு துன்பங்களுக்குட்படுத்தப்பட்டும் தெ. இ. ர. தொழிலாளர்கள் தங்கள் குறிக்கோளை, நிறைவேற்றிக்கொண்டனர் என்பது மிகவும் போற்றற்குரித்தாகும்.

காங்கரஸ் இயக்கம் முதலாளி வர்க்கத்தின் நன்மைக்காகவே பாடுபடுமியக்கம் என்று நாம் அடிக்கடி கூறிவந்துள்ளோம். எங்கள் கூற்றைப் புறக்கணித்து கம்யூனிஸ்ட்கள் 'காங்கரஸ் இயக்கம் எங்கள் தாய் இயக்கம்; அதற்குத்தான் எங்கள் முழு ஆதரவையும் கொடுப்போம்' என்று கூறியதோடு மாத்திரமன்றி 'நீதிக் கட்சியினர் பணமூட்டைகள், வெள்ளையனை இந்தியாவில் நிலைநிறுத்தப் பாடுபடுகின்றவர்கள்' என்றும் தூற்றி வந்தனர். இப்போது அவர்கள் யார் பணமூட்டைகள்; யார் முதலாளி வர்க்கத்திற்குப் பாடுபடுகின்றவர்கள்; யார் வெள்ளையனை இந்நாட்டில் நிலைநிறுத்தப் பாடுபடுகின்றனர் என்பவைகளை உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகின்றோம். இனியாவது அவர்கள் காங்கரஸ் இயக்கம் பாட்டாளி மக்களின் நன்மைக்காகப் பாடுபடும் இயக்கமன்று என்பதை உணர்வார்களா வென்று கேட்கிறோம்.

பொதுவாகத் தொழிலாளர்கள் அரசியல் செய்திகளை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய சக்திகள் பெற்றிருக்க வில்லை. அதனாலேயே அவர்கள் பாட்டாளி மக்களின் நன்மைக்காக உண்மையில் பாடுபடுமியக்கங்களைப் புறக்கணித்து, பாட்டாளி மக்களின் விரோதிகளின் கூட்டங்களைக் கொண்ட காங்கரஸ் இயக்கத்திற்கு ஆதரவு காட்டி வந்தனர். இந்த இரயில்வே வேலை நிறுத்தம் அவர்கள் செல்லும் தவறான பாதையிலிருந்து அவர்களை அகற்றி நல்ல பாதையில் செலுத்தும் என்பது உறுதி.

இரயில்வே தொழிலாளர்கள் தங்கள் நேர்மையானப் போராட்டத்திற்குப் பின்னர் இப்போது வெற்றிபெற்று விட்டனர் என்பது யாவரும் அறிந்ததே. அப்படியிருந்தும் சில தேசிய ஏடுகள் இரயில்வே தொழிலாளர்களைப்பற்றித் தப்புப் பிரச்சாரம் செய்துவருகின்றன.

பொதுவாகத் தேசிய ஏடுகளெல்லாம் இரயில்வே வேலைநிறுத்தம் தொடங்கியதிலிருந்தே வேலைநிறுத்தத்தைப்பற்றி அவதூறான முறையில் விளம்பரப்படுத்திவந்தன. அதை யொட்டியே தினசரியென்ற தேசிய ஏடு 'தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்களுக்குப் படுதோல்வி" என்றுத் தலையங்கம் தீட்டி முழுப் பூசணிக்காயைச் சோற்றால் மறைக்கப் பார்க்கின்றது.

இங்ஙனம் ஓர் தேசிய ஏடு பொய்ப் பிரச்சாரம் செய்யுமானால் அதன் தன்மையை என்னவென்று சொல்லுவது?

பெரியார் இராமசாமி அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்திய இரயில்வேக்களிலுள்ள உணவு விடுதிகளில் பார்ப்பனர்களுக்கும் ஏனையவர்களுக்கும் தனித்தனியே இடங்கள் இருந்ததை ஒழிப்பதற்குக் கிளர்ச்சி செய்தார். அதுகாலை இந்தியாவில் எந்த எந்த இரயில்வேக்களிலுள்ள உணவு விடுதிகளில் இப்படிப் பட்ட பேதம்காட்டப்பட்டதோ அந்த அந்த இரயில்வேக்களிலும் உள்ள உணவு விடுதிகளில் அப்பேதம் அறவே ஒழிக்கப்பட்டது.

அதுபோலவே தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் பல தியாகங்கள் செய்து பெற்ற வெற்றி இன்று அகில இந்திய இரயில்வே தொழிலாளர்களுக்கும் கிட்டிற்று என்ற செய்தி உள்ளபடியே பாராட்டற்குரியது. உரிமைக்காகப் போராடி அவ்வுரிமையைத் தாங்கள் மாத்திரமன்றி தங்களையொத்தவர்களும் பெறும்படியான நிலையை உண்டாக்கிய தெ. இ. ர. தொழிலாளர்களின் செயல் என்றென்றும் போற்றற்குறியது.

திராவிடர் கழகத் திறப்புவிழா

சேலம் குகை திராவிடர்க் கழகத் திறப்புவிழா 6-10-46ல் ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெறும். அது காலை தோழர் கே. ஜெகதீசனார் அவர்கள் தலைமை தாங்குவார்கள். தளபதி சி. என். அண்ணாதுரை அவர்கள் திறப்புவிழா சொற்பொழி வாற்றுவார். தோழர் கே. அன்பழகன் அவர்கள் கொடியேற்றுவார். காலை மாலை நிகழ்ச்சியுண்டு.

8-9-46 காலை பெத்துநாயக்கன் பேட்டை கிருஷ்ணப்பநாயக்கன் குளத்துத் தெரு 63வது இல்லத்தில் பெல்லாரி தோழர் இராசமாணிக்கம் அவர்களின் இளைய மகள் தோழியர் குப்பம்மாளும், சென்னை மாவட்ட திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினரும், நாகமேடு தோழர் சுந்தரம் அவர்களின் இளைய மகனுமான தோழர் தேவராசனும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை ஆகியோரின் நிழற்படங்கள் அச்சிட்ட பைகள் வழங்கப்பட்டன. திருமணத்தின் நினைவாக குடி அரசுக்கு ரூ. 2-8-0 நன்கொடை அளிக்கப்பட்டது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பிள்ளைகள் கல்வி பெற ஒட்டாமல் தடைசெய்வதும் மானுஷிகத் தன்மையா எனக் கேட்கின்றோம்.

சுருங்க உரைக்கில், சகலருக்கும் போதுமான சமத்துவ உணவு, ஆடை, வீடு, கிடைக்க வேண்டுமானால் அவை சமதர்ம ஆட்சியில்தான் (Socialist Raj) பெறமுடியும். தொழிலாளருக்கும், விவசாயிகளுக்கும் ஓய்வுநேரம் கிடைக்க வேண்டுமானால் சமதர்மத்தில்தான் கிடைக்கும். சகலரும் உயர்தரக்கல்வியைப்பெற்று, மூடஜாதி, மூடமத நம்பிக்கை ஆகியவைகளிலிருந்து விடுபட வேண்டுமானால் அது சமதர்ம ஆட்சி மூலமாகத்தான் முடியும். பெண்கள் ஆணுடன் சமத்துவம் பெற வேண்டுமானாலும் சமதர்மத்தில்தான் அனுகூலப்படும். இனிவரும் சந்ததியாரை, [illegible]லும் பட்டினியிலிருந்தும், [illegible]யிலிருந்தும், அகால மரணத்திலிருந்தும் விடுவித்து, உலகை அழகுபெறச் செய்யவேண்டுமானால் அது சமதர்மத்தில்தான் கூடிவரும். நமக்குப் பின்னால் உலகம் ராக,துவேஷ, மோகமற்று, சண்டையற்று, போரற்று, உலகமக்கள் அன்புடன் கூடி வாழவேண்டுமானாலும் அது சமதர்ம ராஜ்ய மூலமாகத்தான் முடியும். உலகம் இப்பேற்றைப்பெற இக்காலத்தில் வழங்கிவரும் கொடிய பொருளாதார வித்தியாசத்தினை முற்றிலும் மாற்றி, சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபித்தல் வேண்டும். இக்காலக் கொடிய திட்டத்தை மாற்றும் வகையையும்; சமதர்ம ஆட்சியினை ஸ்தாபிக்கும் மார்க்கத்தையும், இனி எடுத்துக் காட்டுவோம்.

பெரியார் வார விழா

திருச்சி

திருச்சி இரயில்வே திராவிட குமாஸ்தாக்கள் பெரியார் 68வது ஆண்டு பிறந்தநாள் அன்று (17-9-46) கருப்புச்சட்டை அணிந்து அலுவலகம் சென்றனர். பெரியார் அவர்களின் 68ம் ஆண்டு பிறந்தநாள் நினைவாக பெரியார் அவர்களுக்கு டை. குமாஸ்தாக்களின் சார்பில் 68 அணாக்கள் அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

வாகனேரி (திருச்சி)

இவ்வூர் அந்தோணியர் தெரு தியாகராயர் திராவிடர் கழகத்தில் 17-9-46 இரவு 7மணிக்குப் பெரியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. தோழர் எ. தனசாமி அவர்கள் தலைமை வகித்தார். எ. தைரியம், எ. கபரியேல் ஆகிய தோழர்கள் பெரியாரின் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள். பெரியார் அவர்கள் விரைவில் போர் தொடங்க வேண்டுமென்று பெரியாரைக் கேட்டுக்கொள்வதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டுப்பாளையம்

18-9-46 பெரியார் பிறந்தநாள் இவ்வூரில் கொண்டாடப்பட்டது. நாவலடி, தண்டாயுதம், எஸ். கருப்பண்ணன் ஆர், முத்துசாமி ஆகியோர் பெரியார் பெருந்தொண்டை விளக்கிப்பேசினர்.

வாழ்குடை

20-9-46ல் இவ்வூரில் பெரியார் பிறந்த விழா கொண்டாடப்பட்டது. கருப்புச்சட்டைப்படை அணிவகுத்து ஊர்வலம் வந்த பின்னர் மாலை 7-மணிக்குத் தோழர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. தோழர் பழனியப்பா கொடியேற்றினார். தோழர் சுப்பராயன் பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். வி. எம். தங்கவேலு வி. பி. அண்ணாமலை ஆகிய தோழர்கள் பெரியாரின் தொண்டுகளைப் பற்றிப் பேசினார்கள்.

பெரியார் இராமசாமி நகர்

21-9-46ல் பெங்களூர் பெரியார் இராமசாமி நகரில் (உப்புமண்டி கிராமம்) தோழர் க. கு. கணேசன் தலைமையில் பெரியார் பிறந்தவிழா கொண்டாடப்பட்டது. அதுகாலை தோழர் அ. கொடையாசன் அவர்கள் பெரியார் படத்தைத் திறந்து வைத்து, பெரியாரின் தொண்டைப் பற்றிப், பேசினார். தோழர் பி. பார்த்தசாரதி அவர்கள் பெரியாரும், திராவிடர் கழகமும் என்பதுபற்றிப் பேசினார். தோழர் வி. பாலகிருஷ்ணன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

இளைஞர் சொற்போர்க் கழகம் (சென்னை)

இளைஞர் சொற்போர் கழக ஆதரவில் 22-9-46 காலை 10 மணிக்கு பிரம்மசமாஜ பள்ளியில் பெரியார் பிறந்தநாள் விழா தோழர் எஸ். இராஜன் அவர்கள் எம். எ., தலைமையில் நடைபெற்றது. அரசு, சுந்தரம் ஆகிய தோழர்கள் பெரியார் தொண்டு என்பது பற்றியும், தோழர் எ. எஸ். வேணு அவர்கள் பெரியார் வாழ்க்கையும், தியாகமும் என்பதுபற்றியும் பேசினார்கள்.

திருவையாறு

22-9-46 மாலை 5மணிக்கு திருவையாற்றில் கோவை மைக்கேல் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர் தோழர் எஸ், சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

கோலாலங்காட்

24-9-46ல் மலேயாவைச் சார்ந்த கோலாலங்காட் மாவட்டத்திலுள்ள திராவிடர்கள் பெரியார் பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். பெரியார் பெருந்தொண்டைப் பாராட்டியும், திராவிடப்பிரிவினையை ஆதரித்தும் சொற்பொழிவாற்றினார்கள். இச்செய்தியைக் கோலாலங்காட் விழாக் குழுவின் செயலாளர் தோழர் டி. பி. நடேசன் தந்திவாயிலாகப் பெரியாருக்கறிவித்துள்ளார்.

25-9-46ல் சென்னையில் மிக விமரிசையான முறையில் பெரியார் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. விழாவின் நிகழ்ச்சிகள் அடுத்த வார இதழில் வெளிவரும்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.